அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



அருட்பிரகாச வள்ளலார் சித்திவளாகத்தில்

திருக்காப்பிட்டு மறைந்த அறையின் கதவு

ஸ்ரீ மா ஜய் மா..............ஜய் ஜய் மா ஓ......ம் ...
ஸ்ரீமயி ஜய்மயி..............ஜய ஜய மா ஓ......ம் ...



ஸ்ரீ அன்னை (5-7-1969)

# அருள் காந்தக்கல்-விளக்கம்

வள்ளல் பெருமான் இராமலிங்க சுவாமிகள் இறவா உடல் சித்தி பெற்ற தலமாகிய மேட்டுக்குப்பம் சித்திவளாக மாளிகையில் அவர் ஏற்றி வைத்த **அருட்ஜோதி** முன் வைத்து அர்ப்பணித்த அருள் காந்தக்கல் இரண்டு உங்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

## அருள் காந்தக் கற்களைத் தொடும் முறை :

ஒரு காந்தக் கல்லின் வட துருவப் பக்கம் (**North-Pole–N**) வலது உள்ளங்கையில் (**R**) தொடும்படி வைத்து, இன்னொரு கல்லின் தென் துருவப்பக்கம் (**South Pole–S**) இடது உள்ளங்கையில் (**L**) தொடும்படி வைத்துக் கொண்டால் ஆழ்ந்த தியானம் சுலபமாக வரும். காலை மாலை நேரங்களில் ஆகாரத்திற்கு முன் இவ்வாறு தியானம் பயிலுவீர்கள் உயிருக்கும் உள்ளத்திற்கும் உடலுக்கும் அருளை ஊட்டிப் புனிதப்படுத்தும்.

## செய்திக் குறிப்பு :

ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்தைச் சேர்ந்த திரு **டி. ஆர். துளசிராம் "அருள் காந்தக்கல்"** பற்றி மதுரை குஜராத்தி மகாலில் ஜூலை 26-ந் தேதியன்று சிறப்புச் சொற்பொழிவாற்றினர் வள்ளல் பெருமான் இறவா உடல் சித்தி பெற்ற இடத்தில் பூஜைக்கு வைத்த காந்தக்கல் பெருமானின் அருட் சக்தியைக் கிரகித்து வைத்துக் கொள்ளுகிறது. இதை நாம் தொட்டால் மனது அமைதியடைந்து தியானமும் கூடுகிறது. ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்து அன்னையின் 5–7–69 போட்டோ படத்தின் மேல் தொடும்படி வைக்கின்ற காந்தக் கல்லும் அவ்வாறு அருள் மயமாக விடுகிறது. உதாரணமாக விபூதி, குங்குமம், ஃபேஸ் பவுடர் முதலியவற்றை அருள் மயமாக்குகிறது. அவ்வாறு அருள் மயமாக்கப்பட்ட விபூதி அல்லது ஃபேஸ் பவுடர் பொட்டலம் ஒன்றை வீட்டின் மெயின் சுவிட்சின் இரு வயர்களின் நடுவில் சொருகித் தொடும்படி வைத்தால் வீடு பூராவும் அருள் மயமாகிறது. அதன் பஞ்ச பூதங்களையும் தெய்வீகப் படுத்துகிறது. அந்த வீட்டில் ஆண்டவனின் சாந்நித்தியமும் சக்தியும் குடி கொண்டு வீட்டிலுள்ள அனைவரையும் புனிதப் படுத்துகிறது. பார்க்கின்ற மின் விளக்கு ஒளி, அருள் விளங்கி தியானம் கூடுவதற்கு மிகவும் உதவுகிறது. உடலும் அருள் மயமான பஞ்ச பூதங்களை கிரகித்து மாறுதலடைந்து வருகிறது என்றும் தெரிகிறது. மேற்சொன்ன அருள் காந்தக் கற்கள் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுக்கு திண்டுக்கல் சரவணனந்தா சுவாமிகளால் வழங்கப்பட்டது.

பிரசுரம் :-

**அரோ - மா - ராமலிங்கம் டிரஸ்டு**

33, மஹால் 4வது தெரு, மதுரை-1.